OS.No. 297/2022

Dated : 20.02.2024

Time: 12.50 pm to 12.55 p.m

P.W- 1 சாட்சி நடராஜன் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி சார்பாக குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை

1) நான் அறியானூரில் வசித்து வருகிறேன். என்னுடைய ஊருக்கும் பிரதிவாதி ஊருக்கும் சுமார் 5 கிமீ இருக்கும். நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். அதாவாது வாகனங்கள் வாங்குவதற்காக கடன் கொடுக்கும் தொழில். நான் வாசாஆ.1 ஐ கிரய ஒப்பந்தமாக தான் ஏற்படுத்தியுள்ளேன். தாவா சொத்து பிரதிவாதியின் சுயார்ஜித சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தானது 2325.66 சதுரடி இடம் ஆகும். பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டாரா என்றால் இல்லை. மேற்படி பிரதிவாதி என்னிடம் கடன் தான் கேட்டார் என்றும் அதற்காகதான் வாசாஆ.1 ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் அது தவறு.மேலும் அன்றே பிரதிவாதியிடம் நான் ஒரு புரோ நோட்டும், ரூ.100 முத்திரை தாளில் கையெழுத்து வாங்கிக்கொண்டேன் என்றால் அது தவறு. மேற்படி கிரய தொகை ரூ.3,75,000/- பேசப்பட்டது. முன்பணமாக ரூ.1,50,000/- என்னுடைய வங்கி கணக்கு மூலம் பிரதிவாதிக்கு செலுத்தினேன்.

2) மேற்படி வாசாஆ.1 கிரயம் ஏற்படுத்த இரண்ட வருட காலம் நிர்ணயித்ததற்கான காரணம் பிரதிவாதிக்கு நான் கடன் கொடுத்தால்தான் என்றால் அது தவறு. மேற்படி வாசாஆ.1 க்கு பிறகு மீத கிரய தொகையை தயார் செய்து வந்த பிறகு தான் நான் அவரை கிரயத்திற்கு அழைத்தேன் என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக் குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

Sd/-K.Ananthan
**Subordinate Judge,**
**Attur.**